த.வெ.க.வை தானே அம்பலப்படுத்திக்கொண்ட த.வெ.க.:

வெள்ளை அறிக்கை பொய் என்பதை நிரூபித்த பட்ஜெட்!

த.வெ.க. வெள்ளை அறிக்கை vs த.வெ.க. பட்ஜெட் 2026 – 27 ஓர் ஒப்பீடு!

தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஆக.7-

சமீபத்தில் தவெக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கைக்கும், அவர்கள் தாக்கல் செய்த 2026-27 ஆம் ஆண்டிற்கான முதல் பட்ஜெட்டிற்கும் இடையே உள்ள நிதி முரண்பாடுகள்:

1. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR)

முந்தைய திமுக அரசின் இடைக்கால பட்ஜெட்டில், மாநில வரி வருவாய் 19% அதிகரிக்கும் என்றும், அது ரூ.2,29,579 கோடியாக இருக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இது மிகவும் சாத்தியமற்றது என்றும், உண்மையில் 8% (ரூ.2,08,000 கோடி) மட்டுமே வரி வருவாய் வளரும் என்றும் தவெக தனது வெள்ளை அறிக்கையில் கடுமையாக விமர்சித்தது.

ஆனால், தற்போதைய தவெக பட்ஜெட்டில், தங்களின் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வரி வருவாய் 17.79% அதிகரிக்கும் (ரூ.2,26,740 கோடி) என்று கணக்குக் காட்டியுள்ளனர்.

திமுக கணித்த 19% வருவாய் வளர்ச்சி இலக்கு சாத்தியம் தான் என்பதை தவெக அரசு தனது சொந்த பட்ஜெட் மூலமாகவே மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளது.

2. மொத்த வருவாய் வரவுகள் (TRR)

திமுக பட்ஜெட்டில் மொத்த வருமானம் ரூ.3,44,575 கோடியாகக் கணிக்கப்பட்டிருந்தது மிகைப்படுத்தப்பட்ட கணக்கு என்றும், உண்மையான வருமானம் ரூ.3,30,575 கோடியாக மட்டுமே இருக்கும் என்றும் வெள்ளை அறிக்கை குறை கூறியது.

ஆனால், தவெகவின் புதிய பட்ஜெட்டில் மொத்த வருமானம் ரூ.3,50,027 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திமுக காட்டிய வருமானமே மிக அதிகம் என்று விமர்சித்த தவெக, அவர்களை விட ரூ.5,452 கோடி கூடுதலாக வருமானம் வரும் என்று தற்போதைய பட்ஜெட்டில் காட்டியுள்ளது என்றால் அது எவ்வாறு வரும்? மக்கள் மீதான வரி சுமையை மேலும் அதிகரிக்க போகிறதா?

3. வருவாய் பற்றாக்குறை (Revenue Deficit)

திமுக பட்ஜெட்டில் ரூ.48,696 கோடி வருவாய் பற்றாக்குறை என்று காட்டப்பட்டதை மறுத்த வெள்ளை அறிக்கை, அவர்கள் பல செலவுகளை மறைத்துவிட்டதாகவும், உண்மையான பற்றாக்குறை சுமார் ரூ.90,500 கோடியாக இருக்கும் என்றும் கூறியது.

ஆனால், தற்போதைய தவெக பட்ஜெட்டில் மொத்த வருவாய் பற்றாக்குறை ரூ.55,775 கோடியாக மட்டுமே காட்டப்பட்டுள்ளது.

வெள்ளை அறிக்கை கூறிய பற்றாக்குறையில், சுமார் ரூ.34,725 கோடி தற்போதைய பட்ஜெட்டில் திடீரென எப்படிக் குறைந்தது அல்லது எங்கே மறைக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.



4. மூலதனச் செலவினம் (Capital Expenditure)

மாநிலத்தின் உள்கட்டமைப்புக்காக திமுக அரசு ஒதுக்கிய ரூ.59,562 கோடி மிகவும் குறைவானது என்றும், இது தவறான அணுகுமுறை என்றும் வெள்ளை அறிக்கை கூறியது.

ஆனால், தவெக அரசின் பட்ஜெட்டில் உள்கட்டமைப்புக்காக ரூ.56,985 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

திமுக ஒதுக்கிய நிதியே மிகக் குறைவு என்று குற்றம் சாட்டியவர்கள், தற்போதைய பட்ஜெட்டில் அதைவிட ரூ.2,577 கோடியைக் குறைத்து ஒதுக்கியுள்ளது மிகப்பெரிய முரண்பாடாகும்.

இந்தத் தரவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, தவெக அரசு தங்களது வெள்ளை அறிக்கையை மாநிலத்தின் உண்மையான நிதி நிலையைக் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, அது உண்மையான தரவுகளைத் தருவதற்குப் பதிலாக, முந்தைய திமுக அரசின் மீது குற்றம் சுமத்துவதற்கான ஒரு அரசியல் குற்றப்பத்திரிகையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசின் பட்ஜெட்: மத்தாப்பு, வாணவேடிக்கை!

பழைய திட்டங்களையே சார்ந்து, புதிய வர்ணப் பூச்சு பூசிய மந்தமான பட்ஜெட்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.7

புதிய அரசின் பட்ஜெட் வெறும் மத்தாப்பு, வாண வேடிக்கை போன்றவற்றைத் தவிர, மற்றபடி உப்பு சப்பில்லாத, பழைய திட்டங்களையே சார்ந்து, புதிய வர்ணப் பூச்சு பூசிய மந்தமான பட்ஜெட் ஆகும். மாற்றம் அல்ல; மக்களுக்கு ஏமாற்றமே! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சட்டமன்றத் தேர்தலுக்குப் பின், 108 இடங்களை மட்டுமே பெற்று ஆளுங்கட்சியான த.வெ.க. என்ற புதுக்கட்சி, அதற்குரிய அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில், எதிர்க்கட்சியாக தற்போதுள்ள தி.மு.க.வின் கூட்டணியில் வென்ற கட்சிகள் தலா இரண்டு இடங்களையும், காங்கிரஸ் கட்சி 5 இடங்களையும் பெற்ற நிலையில், அவர்களது கூட்டணித் தாவல்மூலம் தமிழ்நாட்டில் ஆளுங்கட்சி, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திட்ட நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல் வரவு - செலவுத் திட்டம் 5.8.2026 அன்று நிதியமைச்சர் மாரியசெல்வம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. அரசின் மீது குற்றப்பத்திரிகை -

'புகார் காண்டமாக'வே அமைந்த பட்ஜெட்!

இந்த 'பட்ஜெட்' வருவதற்கு முன்பே, நிதிநிலை பற்றியும், முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட கடன் சுமைபற்றியும் ஒரு வெள்ளை அறிக்கை வெளி யிடப்பட்டு, இந்த பட்ஜெட் தனிச் சிறப்புடைய சாதனை பட்ஜெட்டாக இருக்காது என்பதற்கு முன்னுரை போல விளம்பரப்படுத்தப்பட்டது!

அதையே பட்ஜெட்டிலும் திரும்பச் சொல்லியது. ஏராளமான கடன், கடன் சுமை, ஒவ்வொருவர் தலை யிலும் இவ்வளவு, என்ற ஒரு முந்தைய தி.மு.க. அரசின் மீது குற்றப்பத்திரிகை அமைந்த 'புகார் காண்டமாக'வே அமைந்துள்ளது ஒரு வகை விசித்திரமானதாகும்.

முந்தைய தி.மு.க. அரசு, அதிகக் கடன் வாங்கியது என்று 'பூதாகரமாகச்' சொல்லி, புதிய தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டில் பழைய தி.மு.க. ஆட்சியின் சிறப்பான மக்கள் நலத் திட்டங்களையே நீடிக்க வைத்துள்ளது தவிர்க்கப்பட முடியாத மக்கள் நலத் திட்டங்களை தி.மு.க. ஆட்சி சாதனைகளாக செய்தது என்பதற்கு அடையாளமாகும். அவற்றை ரத்து செய்ய முடியாத அளவுக்கு மக்களுக்கான நல்வாழ்வு திட்டங்களாக அவை அமைந்துவிட்டதால், அவற்றைக் கைவிட முடியாது என்பதால்தான், பெயர் மாற்றங்களைச் செய்து - அதில் தங்கள் கட்சி பெயர் வருமாறுதான் அமைத்துள்ளது!

எந்தப் பெயரில் அழைத்தாலும்,

'ரோஜா, ரோஜாதான்!'

பெயர் மாற்றம் செய்ததைத் தவிர, தி.மு.க. ஆட்சி செய்தவற்றைத் தாண்டி - எங்கள் ஆட்சியால் அதைக் கைவிட முடியாது என்பதன்மூலம், தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் - எந்தப் பெயரில் அழைத்தாலும், 'ரோஜா, ரோஜா தான்' என்ற ஆங்கிலப் பழமொழிக் கொப்ப அமைந்துள்ளது.

புதிய முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களது ஆட்சியின் நிதி நிலை அறிக்கை தி.மு.க.வின் திட்டங்களை ஏற்பது என்பதைவிட, அதன் தவிர்க்க முடியாத மக்கள் நல உரிமைத் திட்டங்கள் என்பதைத் தனது ஒப்புதல் வாக்குமூலமாக இந்த பட்ஜெட் அறிவிப்பில் தெளிவாக்கப்பட்டு உள்ளது!

கடன் வாங்குவது, ஆட்சியின் மேலாண்மைக்கு - வளர்ச்சிப் பொருளாதாரத் தேவையின் காரணமாக இன்றியமையாதது!

அரசின் வரவு - செலவுத் திட்டங்களைப்பற்றிய இந்தச் செய்தி பொதுமக்களுக்கும், "படித்த பாமரர்க ளுக்கும்" புரிய வைக்கவேண்டிய முக்கிய செய்தியாகும்.

மக்களின் நலனுக்காக அரசுகள் கடன் வாங்குவதும், செலவழிப்பதும் இயல்பானது!

நாட்டின் வளர்ச்சிக்காக, மக்களின் நலனுக்காக அரசுகள் கடன் வாங்குவதும், செலவழிப்பதும் இயல்பானது. (தனி மனிதரின் வரவு - செலவுத் திட்டம்போல ஆபத்தானதோ, அதிர்ச்சி அடைய வேண்டிய செய்தியோ அல்ல).

அடுத்து கல்வி வளர்ச்சி, மக்கள் நலவாழ்வு (Health), தொழில் வளர்ச்சி போன்றவற்றிற்காக வாங்கும் கடன் வருங்கால வளர்ச்சிக்கான சமூக முதலீடு (Social Development Investment) ஆகும்.

'இன்னும் இரண்டு ஆண்டுகள், புதிய திட்டங்கள் ஒன்றும் செய்ய முடியாது' என்று பட்ஜெட்டில் நிதி யமைச்சர்மூலம் சொல்ல வைத்திருப்பது, "ஆடத் தெரி யாதவள் அரங்கு கோணல் என்றாளாம்" என்பதுபோல, சரியாகத் தன்னால் ஆட முடியாது என்று கூறுவது போன்ற ஒன்றாகும்.

தமிழ்நாட்டின் நிதித்துறை செயலாளர் சித்திக் கடன்பற்றியும், வளர்ச்சியை நோக்கிய அரசின் பயணத்திற்கு அது தேவைப்படும் ஒன்று, என்ப தைப்பற்றியும் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கைத் தாக்கலுக்குப் பிறகு, புதிய தமிழ்நாட்டின் நிதித்துறை செயலாளர் சித்திக் அவர்கள் செய்தியாளர்களிடையே கூறியுள்ள சில கருத்துகள் யதார்த்தத்தை அப்பட்டமாக விளக்குவதாக உள்ளது.

"1. ஒன்றிய அரசிடமிருந்து வர வேண்டியது 7000 கோடி ரூபாய். 2. தமிழ்நாடு உள்பட எந்த மாநில அரசும், ஒன்றிய அரசின் அனுமதி இல்லாமல் கடன் வாங்க முடியாது; அனுமதிக்கப்பட்ட வரம்புக்குள்தான் கடன் வாங்கப்படுகிறது. ஒன்றிய அரசுக்கும் இதே நிலைதான்.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டில், 1.22 லட்சம் கோடி ரூபாய்க்குக் கடன் வாங்கப்படும். இது மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்கும் கீழ்தான் உள்ளது.

கடந்த மூன்று மாதங்களில், (இந்த அரசால்) 21,000 கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளது! கடன் வாங்குவதைக் குறைக்க முடியாது! அடுத்த 50 ஆண்டுகளுக்குக்கூட கடனைக் குறைக்க முடியாது. வருவாயைப் பொறுத்துக் கடன் வாங்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மொத்த வருவாயைவிட 3.40 மடங்கு கூடுதலாக கடன் வாங்கப்பட்டது. இது, இந்த ஆண்டில் 3.17 சதவிகிதமாகக் குறையும்; வருவாய் அதிகரிப்புக்கு ஏற்ப, அதிக நிதி தேவைப்படும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்."

மேலே காட்டியுள்ள இன்றைய புதிய நிதிச் செயலாளர் அவர்களின் கருத்துதான் "அய்யோ, கடனில் மூழ்குகிறோமா" என்ற மாய்மாலக் கண் பொருளாதார அறிவு சூன்யங்களுக்குரிய தக்க பதில்!

இதைத்தான் தி.மு.க. ஆட்சியில், நிதியமைச்சராக இருந்த ஆற்றல்மிகு நண்பர் தங்கம் தென்னரசு, முன்பும் குறிப்பிட்டார்; நேற்றும் சுட்டிக்காட்டியுள்ளார்!

எனவே, Lackluster Budget "மந்தமான" என்ற புதிய அரசின் பட்ஜெட், ஒரு சில மத்தாப்பு, வாண வேடிக்கை, மாமன் சீர் என்பது போன்றவற்றைத் தவிர, மற்றபடி உப்பு சப்பில்லாத, பழைய திட்டங்களையே சார்ந்து, புதிய வர்ணப் பூச்சு பூசிய பட்ஜெட்டே ஆகும்.

மாற்றம் அல்ல; மக்களுக்கு ஏமாற்றமே!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விஜய் அரசின் முதல் பட்ஜெட்

மக்களை ஏமாற்றுகிற பட்ஜெட்!

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை!

சென்னை, ஆக. 7-

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் எஸ். பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விஜய் அவர்களின் தமிழக அரசின் முதல் பட்ஜெட் மிகுந்த ஏமாற்றம் அளிக்கும் பட்ஜெட் என்று கூறுவதைவிட, மக்களை ஏமாற்றுகின்ற பட்ஜெட் என்றே எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(எம்.கே) கருதுகிறது.

அன்று நடிகராக இருந்த விஜய் தேர்தல் காலத்தில் அளித்த வெற்று வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த விவசாயிகளுக்கும், பெண்களுக்கும் பட்டை நாமத்தை போட்டுள்ளார். விவசாய கடன்கள் முழுமையாக ரத்து செய்யப்படும் என்று அளித்த வாக்குறுதி அம்போவாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு மாதம் 2500 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படும் என விஜய் அறிவித்த வாக்குறுதி பொய்யாகி காற்றில் கரைந்து போனது.

கல்வியும், மருத்துவமும் கட்டணமின்றி கிடைக்கப்பெறு வது மக்களின் அடிப்படை உரிமை. ஆனால் இத்துறைகளின்பால் விஜய் அரசின் கவனம் செல்லவே இல்லை. பள்ளி கல்விக்கும் உயர் கல்விக்குமான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சி காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களுக்கு பெயரை மட்டும் மாற்றி தங்களது திட்டம் போல அறிவிக்கும் மோசடி வேலைதான் இந்த பட்ஜெட்டில் நடந்துள்ளது.

மேலும் தமிழகத்தில் புதிய தொழில் வளர்ச்சிக்கோ, விவசாய மேம்பாட்டிற்கோ, வேலையின்மையை போக்குவதற்கோ, கல்வித்துறை வளர்ச்சிக்கோ, மின்சாரத் துறை குளறுபடிகளை போக்குவதற்கோ எந்த ஒரு உருப்படியான திட்டமும் அறிவிக்கப்படவில்லை.

சென்னை நகரில் ஏற்கனவே கட்டத் தொடங்கப்பட்டு, பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளை தொடர்ந்து நடத்தி முடிப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டதாக தெரியவில்லை.

மெட்ரோ ரயில் சேவைகளை மேலும் பல பகுதிகளுக்கு நீட்டிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதற்கான காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அதேவேளையில் ஏற்கனவே பணிகள் நடந்து கொண்டுள்ள மெட்ரோ ரயில் திட்டப் பணிகளில், பூந்தமல்லியில் இருந்து ஆலந்தூர் வரையிலான சேவையும், பூந்தமல்லியில் இருந்து வடபழனி தியாகராய நகர் பகுதிகளை இணைக்கும் மெட்ரோ ரயில் பயண சேவையும் எப்பொழுது தொடங்கும் என்பதற்கான அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் இல்லை.

இவை தமிழகத்தின் தலைநகர் சென்னை மக்களை மிகப்பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி உள்ளது.

மொத்தத்தில் புதிய தமிழக அரசின் இந்த பட்ஜெட் நாங்கள் இந்த அறிக்கையின் ஆரம்பத்தில் கூறியது போல ஏமாற்றம் அளிக்கும் வெற்று பட்ஜெட் மட்டுமல்ல மொத்தத்தில் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களை ஏமாற்றும் பட்ஜெட் என்று எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி(எம்.கே) கருதுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.